[பேரவைத் தலைவர்] [2011 ஜனவரி 10

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(11-1-2011)* செவ்வாய்க்கிழமை காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 14-7-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-II பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் II(2)/MW/362(a)/*2006* ஆம் எண் அறிவிக்கையில் திருத்தங்கள் செய்தது குறித்தும் மற்றும் திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த காங்கேயம் பேரூராட்சியில் அடங்கியுள்ள உள்ளூர் பகுதிகளை இரண்டாம் நிலை நகராட்சியாக வகைப்பாடு செய்தது குறித்தும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி 5) துறையின் *1-6-2010* ஆம் நாளிட்ட *99* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். *[1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

2. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பில் திருத்தங்கள் செய்தது குறித்து எரிசக்தித் துறையிடமிருந்து வரப்பெற்ற *15-12-2008* ஆம் நாளிட்ட TNERC/SC/7-11, *27-2-2009* ஆம் நாளிட்ட TNERC/SC/7-12, *15-6-2009* ஆம் நாளிட்ட TNERC/SC/7-13, *9-10-2009* ஆம் நாளிட்ட TNERC/SC/7-15 மற்றும் *29-12-2009* ஆம் நாளிட்ட TNERC/SC/7-16-ல் வெளியிடப்பட்டுள்ள அறிவிக்கைகள். *[2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

3. 29-2-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-II, பிரிவு-2ல் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் II(2)/வ.வ.ப/119(b-1)/2008 ஆம் எண்

2011 ஜனவரி 10]

அறிவிக்கையில் மாற்றம் செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (C2) துறையின் 5-7-2010 ஆம் நாளிட்ட 121 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. திருவாளர்கள் மெட்ராஸ் ரீஃபைனரீஸ் லிமிடெட் நிறுவனம், திருவாளர்கள் தமிழ்நாடு பெட்ரோ புராடெக்ட்ஸ் நிறுவனத்திற்கு விற்பனை செய்த லீனியர் ஆல்கைல் பென்சீன் மூலப்பொருட்களின் மீது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கைகளில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு குறைத்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 24-9-2010ஆம் நாளிட்ட 163 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டம் தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (கூடுதல் நடுவர் ஆயம்) கூடுதல் உறுப்பினர் (நீதிமுறை) நியமித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (இ2) துறையின் 13-7-2010ஆம் நாளிட்ட 98 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் முப்பத்தைந்தாவது ஆண்டறிக்கையும் கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

7. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

8. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் முப்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

9. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் இருபத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

10. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2010 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/2010)

2. தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

3. 2011 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 7 ஆம் நாள் தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

4. 'ஆளுநர் உரையில் அகழ்ந்தெடுத்த முத்துக்கள்' என்கிற சிறுநூல். (தமிழ்)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS